*4*

# ஒரு குடும்பத்தைக் காப்பாற்றிய மனிதர்

## (2 இராஜாக்கள் 4:1–7)

*கடந்த பாடத்தில் எலிசா வெளிப்படையான, பிரம்மியமான அற்புதத்தால் மூன்று இராணுவங்களை காப்பாற்றினார். இந்த பாடத்தில் அவர் எப்படி ஒரு அமைதியான, தனிப்பட்ட அற்புதத்தினால் ஒரு குடும்பத்தை காப்பாற்றினார் என்பதை பார்ப்போம். பின்புலச் சூழலானது, ஒரு சர்வதேச அமர்வு என்ற நிலையிலிருந்து ஒரு தனிப்பட்ட குடும்பம் என்ற நிலைக்கு மாறிவிட்டது. ஆகவே நாம் பிந்திய அற்புதத்தை முந்திய அற்புதத்திலும் மதிப்பு குறைந்ததாக காண வேண்டுமா? இல்லவே இல்லை! ஒரு குடும்பம் எப்படியோ அப்படியே ஒரு தேசம் இருக்கிறது என சொல்லப்பட்டுள்ளது. எதுவெல்லாம் ஒரு குடும்பத்தை வலிமைப்படுத்துகிறதோ, அதுவெல்லாம் ஒரு தேசத்தையும் வலிமைப்படுத்துகிறது, எதுவெல்லாம் ஒரு தேசத்தை வலிமைப்படுத்துகிறதோ, அதுவெல்லாம் உலகத்தை வலிமைப்படுத்துகிறது.*

*ஒரு குடும்பத்திற்கு உதவியதில் எலிசா தன் முன்னாள் தலைவர் எலியாவின் அடிச்சுவடுகளில் நடந்துள்ளார் (காண்க 1 இராஜாக்கள் 17:8-24). தேவன் குடும்பத்தை குறித்து அக்கரையுள்ளவராக இருக்கிறார், நாமும் அவ்விதமே இருக்க வேண்டும்! இந்த பாடம் நிறைவடைவதற்கு முன்பாக இன்று நாம் எவ்விதம் போராட்டங்கள் நிறைந்த குடும்பங்களுக்கு உதவமுடியும் என்பதை சிந்திப்போம்.*

### *நம்பிக்கை அற்ற ஒரு குடும்பம் - பிறகு (4:1-7)*

**உடைந்த இருதயம்**

*இந்த கதை துவங்குகையில் எலிசா மீண்டும் இஸ்ரவேலில் இருந்தார். அநேகமாக அவர் தீர்க்கதரிசிகளின் பள்ளிகள் இருந்த ஒரு பட்டணத்தில் இருந்தார்: பெத்தேல், எரிகோ அல்லது கில்கால் (2 இராஜாக்கள் 2:3, 5; 4:38). அவர் அங்கே இருக்கையில், "தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ" (2 இராஜாக்கள் 4:1அ) அவரிடம் வந்தாள். இந்த ஸ்திரீயை பற்றிய விவரிப்பு, சில தீர்க்கதரிசி - பயிற்றுனர்கள் ("தீர்க்கதரிசிகளுடைய புத்திரர்") அமெரிக்காவில் "கல்லூரி வயது" (பதினெட்டு முதல் இருபத்தி இரண்டுவரை) என அழைக்கப்படுகிற வயதை விட வயதானவர்களாக இருந்தார்கள் என்பதை நமக்கு தெரிவிக்கிறது. மேலும் இந்த பயிற்சியாளர்கள் பிரமச்சாரிகளாக இருக்கவில்லை என்பதும் தெளிவாகிறது. சிலர், திருமணமான நிலையைவிட திருமணமாகாத நிலை பரிசுத்தமானது என கூறுகின்றனர், ஆனால் வேதாகமம் "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது" என போதிக்கிறது*

(எபிரெயர் 13:4அ).

இந்த பெண் ஒரு துயரமான சம்பவத்தை சொல்லக் கூடியவளாக இருந்தாள். "உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் கர்த்தருக்கு பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான்" என்று அவள் கதறியபோது, அவள் முகத்தில் வழிந்தோடிய கண்ணீரையும், நடுங்கும் குரலையும் பாருங்கள் (2 இராஜாக்கள் 4:1ஆ). அவள் தனது புருஷனை எலிசாவின் "அடியான்" என்றும் தன்னை பிற்பாடு எலிசாவின், "அடியாள்" எனவும் விவரித்தாள் (வசனம் 2). அவளும் அவர் கணவரும் எப்போதும் தீர்க்கதரிசியுடைய வசனத்தை கவனிக்கவும் அதற்கேற்றபடி நடக்கவும் ஆயத்த மாக இருந்தார்கள்.

பிறகு அவள் தன் கணவனை "கர்த்தருக்கு பயந்து நடந்தான்" என கூறினாள்: அவர் தேவன் மற்றும் அவருடைய வசனத்தை மதிக்கிறவராக இருந்தார். ஆவியினால் ஏவப்படாத யூத பாரம்பரியம் இவரை நூறு தீர்க்கதரிசிகளை குகைகளில் ஒளித்து வைத்து போஷித்த ஒபதியா என அடையாளப்படுத்துகிறது (காண்க 1 இராஜாக்கள் 18:3, 4).[1] ஆகாப் ராஜாவின் வீட்டு மேலாளர் ஒருவர் தீர்க்கதரிசி பயிற்சியாளராய் இருப்பார் என்பது நடைபெற சாத்தியம் இல்லாததாக தோன்றுகிறது. இந்த பெண்ணின் கணவர் ஒரு *நல்ல* மனிதராக இருந்தார் என நாம் சொல்வோம். நல்ல மனிதருக்கு சோகம் நேரிடக்கூடுமா? ஆம். அது நேரிடக்கூடும். தங்கள் முழு இருதயங்களோடும் கர்த்தரை சேவிக்க முயற்சிக்கிறவர்களுக்கு இது உண்டாகுமா? ஆம். இது நேரிடக்கூடும் மற்றும் நேரிட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த பெண்ணின் தேவபக்தியுள்ள கணவர் மரித்துவிட்டார் - அதுவே அவள் இருதயத்தை சுக்குநூறாக உடைத்திருக்கும். அவர் தன் வாழ்நாள் எல்லாம் தன் அருகாமையில் தன்னோடு இருப்பார் என அவள் எதிர்பார்த்தாள், ஆனால் இப்போது அவள் திடீரென வெறுமையாய் போய் விட்ட, பெரிய கட்டிலில் இரவில் அவள் தனிமையில் படுத்துகிடக்கிறாள். சோகம் இத்தோடு நிற்கவில்லை. அவளது கணவர் வளர்க்கப்பட வேண்டிய இரண்டு இளம் பையன்களை விட்டுச் சென்று விட்டார் (2 இராஜாக்கள் 4:1, 5). பண்டைய உலகில், கணவரை பறி கொடுத்த பெண்ணைவிட, அவரையும் இழந்து, அவரது ஆதரவற்றை பிள்ளைகளையும் வளர்க்கவேண்டிய நிலையில் இருந்த பெண்ணே மிகவும் உதவியற்றவளாக இருந்தாள். "ஒரு பெற்றோராய்" இருந்து இன்று பிள்ளைகளை வளர்ப்பது என்பது எவ்வளவு கடினமானதாக இருக்கக்கூடும் என்பதை உங்களில் சிலர் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் சந்திக்கும் சவால்களை நூறால் பெருக்கிக் கொள்ளுங்கள், அப்பொழுது எலிசாவின் நாட்களில் வாழ்ந்த விதவை தாய்மார்கள் எத்தனை துன்பங்களை அனுபவித்திருப்பார்கள் என்பது பற்றிய ஒரு புரிதல் உங்களுக்கு கிடைக்கும்.

சோகம் இன்னமும் மோசமானது: வருவாய் ஆதாரங்கள் இல்லாத நிலையில் அவளது கணவர் அவளை விட்டு சென்றது மட்டும் அல்ல, அவர் அவளை அதிக கடனிலும் விட்டுச் சென்று விட்டார். அது எப்படி ஏற்பட்டது என நமக்கு தெரியவில்லை. ஒருவேளை இது அவருடைய தவறாக இருந்தது. அநேக தேவனுடைய ஊழியக்காரர்கள் பொருளாதார காரியங்களில் மோசமான தீர்மானங்களை எடுத்திருக்கிறார்கள். அவளுடைய கணவர் மிகவும் தாராள

மனமுடையவராய் இருந்தார் என சொல்லப்பட்டதுண்டு. ஒபதியா தான் அவள் கணவராக இருந்தார் என்ற பாரம்பரியம் தொடர்பாக அவர் ஒளித்து வைத்த தீர்க்கதரிசிகளை பராமரிப்பதற்காக கடன் வாங்கினார் என ஜோசிபஸ் கூறுகிறார்[2] - மேலும் அவர் மரித்தபோது, அவள் அந்த கடனை திருப்பி செலுத்துவதற்கு வழிஇல்லாமல் போய்விட்டது.[3]

கணவர் இந்த காரியத்தில் தவறிழைக்கவில்லை என்பது சாத்தியமாயிருக்கிறது. தேவ தாசர்கள் அவமானப்படுத்தப்பட்ட ஒரு தேசத்தில் அவர் தேவ தாசராக இருந்தார். அவருடைய வருவாய் ஆதாரங்கள் எதுவாக இருந்தபோதிலும், அது குறைவானதாக இருந்திருக்க வேண்டும். ஒருவேளை அவருடைய முதலாளி அவருடைய சம்பளம் எல்லாவற்றையும் கொடுக்க தவறிவிட்டார். ஒருவேளை இவரிடம் கடன் பெற்றவர்கள் அதை திருப்பிச் செலுத்தவில்லை. ஒருவேளை அவர் தன் குடும்பத்தை பராமரிப்பதற்காக கடன்பெறவேண்டியிருந்தது - கடனை திருப்பி செலுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையில் - ஆனால் வாழ்க்கை நிச்சயமற்றது மற்றும் குறுகினது, அவருடைய நல்ல எதிர்பார்ப்புகள் அவரோடு மரித்துவிட்டன.

சோகத்தின் மேல் சோகம் வந்தது - ஆனால் அதிலெல்லாம் மிகவும் மோசமான சோகம் என்னவென்றால் அவளுடைய கணவருக்கு கடன் கொடுத்தவர் அவள் பையன்களை எடுத்துக்கொள்ள வந்ததுதான். இன்று நாம் ஒரு பிரபலமான கடன் வழங்கும் நிறுவனத்தில் கடன் பெறும்போது, விதியின்படி அவர்கள் ஜாமின் பெற்ற பிறகு தான் கடன் வழங்குகிறார்கள். அது பொதுவாக வீடு, நிலம் அல்லது வாகனம் போன்றவையாக இருக்கிறது. நாம் கடனை திருப்பி செலுத்தாவிட்டால், எதுவெல்லாம் ஈடாக வைக்கப்பட்டதோ அது எடுத்துக்கொள்ளப்படும். எலிசாவின் நாட்களில் "ஈடுமதிப்பாக" கருதப்பட்டது கடன் கொடுப்பவருடைய தனிப்பட்ட வேலைதிறன் மதிப்பாக இருந்தது. கடன் திருப்பி செலுத்தப்படாமல் இருந்ததானால், அந்த மனிதன் (அவனுடைய குடும்பமும்) எடுத்துக்கொள்ளப்படமுடியும் (காண்க மத்தேயு 18:25). இது மோசேயின் பிரமாணத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அடிமை வேலையின் வகை மற்றும் வேலை ஆண்டுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன (காண்க யாத்திராகமம் 21:1, 2; லேவியராகமம் 25:39-41; உபாகமம் 15:1-11). (நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லாததற்காக நீங்கள் சந்தோஷப்படவில்லையா?) அந்த மனிதன் எடுத்துக்கொள்ளப்படுவது சாத்தியமாக இருக்கவில்லை, ஆகவே கடன் வழங்கியவர் கடனுக்காக அவன் பையன்களை பிடித்து செல்ல தீர்மானித்துவிட்டார்.

அந்த கடன் கொடுத்தவன் யார் என நமக்கு சொல்லப்படவில்லை. ஆவியினால் ஏவப்படாத ஒரு பாரம்பரியம், அவனை ஆகாப் ராஜாவின் மகனான யோராம் என அழைத்தது.[4] அவர் யாராக இருந்திருந்தாலும், வட ராஜ்யத்தில் உண்மையாய் இருந்தவர்கள் மேல் அவருக்கு அனுதாபம் இருக்கவில்லை. அவர் இருதயம் அற்றவராக இரக்கம் அற்றவராக மற்றும் பரிதாப உணர்வு அற்றவராக இருந்தார். அந்த பெண்ணின் மகன்கள் அவளுடைய ஜீவன்; அவர்கள் அவளுடைய கடைசி நம்பிக்கையாக இருந்தார்கள். "பிள்ளைகள் பெரியவர்களாகி வேலைகளை செய்கிறவரை நாம் உயிரோடு இருந்தால், நாம் நன்றாயிருப்போம்!" என அவள் சிந்தித்திருக்கலாம். கடன் கொடுத்தவன் இதைப்பற்றியெல்லாம் அக்கறைப்படவில்லை. அவன் ஏற்கனவே அவள் கணவர்

அவளுக்கு விட்டுச் சென்ற எல்லாவற்றையும் வீட்டிலிருந்து அபகரித்துவிட்டான் (காண்க 2 இராஜாக்கள் 4:2). அவன் அவள் கைகளில் இருந்து பிள்ளைகளை பிடுங்கிச் செல்வதற்கான தேதியை குறித்து விட்டான்.[5]

இப்படியாக, அந்த பெண் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் நன்கு அறியப்பட்ட அந்த மனிதரிடத்தில் வந்தாள் (காண்க 2 இராஜாக்கள் 2:19-22). அவள் அவரிடம் தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். அவள் வேண்டுகோள் எதுவும் வைக்கவில்லை; ஆனால் மிகுந்த ஆவலான, பேசப்படாத "நான் என்ன செய்யட்டும்?" என்ற ஒரு கேள்வி காற்றில் மிதந்தது.

**உதவி**

எலிசாவை குறித்து இவ்வாறு சொல்லப்பட்டது, "அவரிடம் உதவி செய்யும்படி ஒருபோதும் இருமுறை கேட்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை."[6] "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என அவர் கேட்டார் (4:2அ). விதவைகள் மற்றும் திக்கற்றோர் தேவனுடைய இருதயத்தில் எப்போதுமே சிறப்பான ஒரு இடத்தை உடையவர்களாக இருந்தார்கள் (காண்க உபாகமம் 10:18; சங்கீதம் 146:9; யாக்கோபு 1:27). அவர், "திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதைவைகளுக்கு நியாயம் [அதாவது அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறவர்] விசாரிக்கிறவருமாயிருக்கிறார்" (சங்கீதம் 68:5). தேவனுடைய மனிதர் இப்படியாக உதவி செய்ய ஆயத்தமாக இருந்தார்.

எலிசா தான் என்ன செய்ய வேண்டுமென்று அந்த பெண் சொல்லுமளவுக்கு காத்திருக்கவில்லை. அதற்குப்பதிலாக, என்ன செய்யவேண்டுமென அவளிடத்தில் அவர் கூறினார். அவர் "வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல்" என கேட்பதின் மூலம் துவங்கினார் (வசனம் 2ஆ). அவள் வருத்தத்தோடு, "ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்." "குடம்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை அந்த குடுவை அளவில் சிறியது மற்றும்/அல்லது அதன் கொள்ளளவு குறைவாய் இருந்தது என்பதை உணர்த்துகிறது.[7] இப்படியாக NIV இல் "கொஞ்சம் எண்ணெய்" என்றுள்ளது. இந்த பெண் தன் சொந்த அடக்கத்திற்காக அதை பாதுகாத்து வைத்திருந்தாள் என சில விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றனர்,[8] ஆனால், பெரும்பாலானவர்கள் அது சமையல், மருத்துவம், பூசிக்கொள்ளுதலுக்குரிய மற்றும் அபிஷேகம் செய்வதற்குரிய பொதுவான ஒலிவ எண்ணெயாக இருந்தது என நம்புகின்றனர். எப்படியிருந்தாலும் அது எந்த வகையாயிருப்பினும் அந்த சிறிய குடுவையின் எண்ணெயை மாத்திரம் கடன்காரர் அவளுக்கு விட்டுவைத் திருந்தார்.

F. W. குருமாச்சார் அந்த வீட்டின் வெறுமையை பின்வருமாறு விவரிக்கிறார்: "வெற்று சுவர்கள், காலியான பொருள் வைக்கும் இடங்கள், மர இருக்கைக்கு முன்னால் இருந்த காலியான மேசை, வைக்கோல்படுக்கை மற்றும் வெறுமையான அறை."[9] அவளுக்கு ஒரு சிறிய அளவைத்தவிர, வேறு எதுவும் இருக்கவில்லை. இருப்பினும் அவளிடத்தில் கொஞ்சம் இருந்தது - ஒரு சிறிய குடுவையில் எண்ணெய் - அவளுக்கு இருந்ததை அவள் பயன்படுத்த வேண்டுமென தேவன் எதிர்பார்த்தார். இரண்டு பழமொழிகள் என் மனதிற்கு வருகின்றன: "தனக்குத் தானே உதவி செய்து கொள்கிறவர்களுக்கு தேவன் உதவி செய்கிறார்" மற்றும் "தேவன் அதில் இருக்கும்போது சிறிதளவுகூட பெரிதாயிருக்கிறது."

அப்பொழுது எலிசா, "நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கு" என்றான் (வசனம் 3). "பாத்திரங்கள்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை ஒரு பொதுவான வார்த்தையாக இருக்கிறது. பல வகை அளவுகள், வடிவமைப்புகள் மற்றும் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட பொருள்கள் என எல்லா பாத்திரங்களையும் குறிப்பதற்கு அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. அந்த ஒவ்வொரு பாத்திரத்திற்கும் இருக்கவேண்டிய ஒரே தகுதி அது காலியாக இருக்கவேண்டும்: அவர் அவளிடம் ஒரு சில பாத்திரங்களை அல்ல, அநேகம் பாத்திரங்களைக் கேட்டு வாங்க வேண்டும் என எச்சரித்திருந்தார் (வசனம் 3ஆ). இந்த அறிவுரைகள் மற்றும் அவைகளின் முக்கியத்துவம் நமக்கு பிறகு தெளிவாக தெரியவரும்.

இதை நீங்கள் எந்த கோணத்தில் பார்த்தாலும், எலிசாவின் அறிவுரைகள் விநோதமாக இருக்கின்றன. இந்த பெண் ஒருவேளை இப்படிச் சொல்லி எதிர்ப்பு தெரிவித்திருக்கலாம், "நான் என் பையன்களை இழக்கப் போகிறேன், நீங்கள் காலி பாத்திரங்களை சேகரிக்கச் சொல்கிறீர்களே!" - ஆனால் அவள் அப்படிச் செய்ய வில்லை. அவள் இப்படிக்கூட சொல்லியிருக்கக்கூடும், "எனது தொல்லைகளால் எனக்கு மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டது என என் அயலகத்தார் நினைக்கலாம். இந்த காலிப்பாத்திரங்களை வைத்து நீ என்ன செய்யப்போகிறாய் என்று அவர்கள் வினவினால், நான் அவர்களுக்கு என்ன பதில் கூறப்போகிறேன்?" - ஆனால் அவள் அப்படிக் கூறவில்லை. சில நேரங்களில் தேவனுடைய கட்டளைகள் நமக்கு அர்த்தமுடையவைகளாக இருக்கும், சில நேரங்களில் அப்படி இருக்காது - ஆனால் அவைகள் பற்றி நாம் என்ன சிந்தித்தாலும், அவைகள் எப்போதும் *சரியானவைகளாக* இருக்கின்றன.

எலிசா தன் அறிவுரைகளைத் தொடர்ந்தார்: "உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவை பூட்டி" (வசனம் 4அ). அவர் இந்த அற்புதம் ஒரு தனிப்பட்ட தனி நபர்களுக்கு உரியதாக இருக்க வேண்டுமென விரும்பினார். "அந்த பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து (உன்னிடத்திலுள்ள எண்ணெயை) நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான்" (வசனம் 4ஆ).

**மகிழ்ச்சி**

அந்த பெண் போய் (வசனம் 5அ) பாத்திரங்களை சேகரிக்க துவங்கினாள். பெரிய பாத்திரங்கள், சிறிய பாத்திரங்கள், நடுத்தர பாத்திரங்கள். பழைய மற்றும் புதிய பாத்திரங்கள், ஆடம்பரமான மற்றும் சாதாரண பாத்திரங்கள், பாத்திரங்கள் அநேகம் பாத்திரங்கள் என அவள் வீடு விரைவிலேயே அநேக பாத்திரங்களால் நிறைந்துவிட்டன. பிறகு அவள் முன் பக்க கதவை பூட்டினாள் (வசனம் 5ஆ). இதுபோல நடந்த அந்த சம்பவத்தை நான் கற்பனை செய்து பார்க்கிறேன்:

> அந்த பெண் தனது சிறிய எண்ணெய் குடுவையை எடுக்கிறாள், அவளைச் சுற்றி வைக்கப்பட்டிருந்த பாத்திர வரிசைகளுக்கு முன்பாக அது எவ்வளவு சிறியதும் முக்கியம் இல்லாததுமாக இருந்தது! அருகாமையிலுள்ள பாத்திரத்தில் அவள் கையால் அதை ஊற்றியபோது அவளால் நம்ப முடிய வில்லை. எண்ணெய் வழிந்து கொட்டத் துவங்கியது ... வழிந்தோடியது

*... வழிந்தோடியது. அவளுடைய கண்கள் அகலமாயின, பெரியதாயின. பாத்திரம் நிரம்பி வழியும்மட்டும் எண்ணெய் கொட்டிக்கொண்டிருந்தது. அவள் தன் மகன்களை பார்த்து, "நீங்கள் சீக்கிரமாய் இன்னொரு பாத்திரம் கொண்டு வாருங்கள்!" என்றாள். பாத்திரம் நிறையுமட்டும் எண்ணெய் தொடர்ந்து கொட்டியது. பையன்கள் மூன்றாவது பாத்திரத்தை தங்கள் தாயிடம் கொண்டுவர ஓடினார்கள். தீர்ந்துபோகாத ஆதாரமூலத்திலிருந்து (வசனம் 5இ) பாத்திரம் பாத்திரமாக நிரம்பிக் கொண்டிருந்தபோது, அதிக துக்கத்தை கண்ட இந்த குடும்பத்திற்கு சந்தோஷம் திரும்ப வந்தது. பையன்களுடைய உற்சாக தொனியோடு தாயின் சிரிப்பு அலையும் சேர்ந்து கொண்டது. அவள் முகத்திலிருந்து சோக கோடுகள் மறைந்தன, அவளுடைய இருதயத்திலிருந்து சுமை எடுபட்டுப்போயிற்று.*

*இறுதியாக, அந்த பெண் தன் மகன்களில் ஒருவனை நோக்கி, "இன்னும் ஒரு பாத்திரம் கொண்டுவா" என்றாள். அதற்கு அவன்: "வேறே பாத்திரம் இல்லை" என்றான் (வசனம் 6அ). அவர்கள் சேகரித்திருந்த எல்லா பாத்திரங்களும் நிரம்பியிருந்தன. "அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று" (வசனம் 6ஆ): சிறிய குடுவையிலிருந்து எண்ணெய் வழிந்தோடுவது நின்று போயிற்று; அது காலியாகிவிட்டது; அற்புதம் முடிந்துவிட்டது. "சில பாத்திரங்களை சேகரிக்காதே," என்ற அறிவுரையின் முக்கியத்துவத்தை அந்த பெண் இப்போது புரிந்து கொண்டிருப்பாள். ஊற்றப்படும் எண்ணெயின் அளவு அவள் சேகரித்து வைத்திருந்த பாத்திரங்களின் எண்ணிக்கையால் அளவிடப்பட்டிருந்தது.*

*நிகழ்ந்த பெரிய மற்றும் அற்புதமான சம்பவத்தை எலிசாவிடம் அறிவிக்க அப்பெண் விரைந்துசென்றாள் (வசனம் 7அ). மறுபடியும் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தோடியிருக்க வேண்டும். மற்றும் அவள் குரல் தளுதளுத்து போயிருக்க வேண்டும் - ஆனால் இந்த முறை வழிந்தது ஆனந்த கண்ணீராக இருந்தது மற்றும் அவள் தொனி ஆச்சரியத்தால் தளுதளுத்ததாய் இருந்தது. என்ன நடந்தது என்பதை அவள் தீர்க்கதரிசியிடம் அறிவிக்கையில், மறுபடியுமாக பேசப்படாத ஒரு கேள்வி எழுந்தது: "இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" தெய்வீக வழிநடத்துதல் இல்லாமல் அவள் மேற்கொண்டு எதுவும் செய்ய விரும்பவில்லை.*

*அப்பொழுது அவன், "நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக் கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம்பண்ணுங்கள்," என்றான் (வசனம் 7ஆ). "கடனை கட்டிவிடு"? கஞ்சத்தனமான, இரக்க மில்லாத, அவளுக்கு அன்பான பையன்களை அடிமைகளாக்க ஆயத்தமாக இருந்த அந்த ஜீவனின் கடனை அடைத்து விடவேண்டுமா? ஆம். வேதாகமம், நாம் நமது கடன்களை அடைத்துவிட வேண்டுமென போதிக்கிறது (ரோமர் 13:8அ;* NIV*). ஹென்றி பிளண்ட் என்பவர் பின்வருமாறு எழுதினார், "கடன் கொடுத்தவன் இரக்கமற்றவனாயிருந்தாலும், நீ அநீதியாக இராதே; மற்றவர்கள் நம்மிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது, நாம் அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளின் தன்மையை மாற்றுவதில்லை"[10] (காண்க ரோமர் 12:21).* W. T. *ஹேமில்டன் இவ்விதம் கூறுகிறார், "ஒரு ஏமாற்றக் காரனிடத்தில் நேர்மையாய் நடப்பவரே [உண்மையில்] நேர்மையானவர்"[11]*

*கடன் செலுத்தித் தீர்ந்தபின்பு, அந்த பையன்கள் வளர்ந்து, தங்களையும் தங்கள் தாயையும் பராமரித்துக்கொள்கிற வரையிலும், அவர்களுக்கு போதுமானது மிஞ்சியிருந்தது.*

*வேதாகமத்தின் கதை அத்துடன் முடிகிறது, ஆனால் அதின் தாக்கத்தை சிந்திப்பது கடினமானது அல்ல:*

> *எண்ணெய் விற்பனை செய்யப்பட்டது. கடன்காரன் வந்தபோது, தாயும் பையன்களும் அவனுக்காக காத்திருந்தார்கள். அவள் நாணயங்கள் நிரம்பின ஒரு பையை அவன் கையில் திணித்து, "இதோ உன் பணம்!" என்றாள். அவன் வாயடைத்துப் போனான். என்ன, என்ன, என்ன என மெதுவாக முணகினான். அவள் அவனை நோக்கி, "எங்கள் தேவன் எங்களுக்காக கரிசனைப்பட்டார். உன்னுடைய கடினமான, கடினமான இருதயத்தி லிருந்து எங்களை காப்பாற்றிவிட்டார். நீ உன் பணத்தை எடுத்துக்கொள், நான் என் பையன்களை என்னோடு வைத்துக்கொள்வேன்!" என்றாள். கடன்காரன் தலையை அசைத்துக்கொண்டு வெளியேறியதைப் பார்த்தபோது அவளுடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது.*[12]

## நம்பிக்கையற்ற குடும்பங்கள் - இன்று

*இந்த உணர்வை தட்டி எழுப்பும் கதையிலிருந்து நாம் கற்றுக் கொள்வதற்கான பாடங்கள் உள்ளனவா? ஆம், "நமக்குப் போதனையாக எழுதி யிருக்கிறது" (ரோமர் 15:4).*

**உடைந்த இருதயம்**

*இந்த கதை துவங்கியபோது, நாம் நம்பிக்கையற்ற ஒரு குடும்பத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டோம். அது ஒரு தேவ பக்தியுள்ள குடம்பமா யிருந்தது, ஆனாலும் பெரும் துன்பம் வந்தது. இந்த பாவம் - நிறைந்த உலகில், சில நேரங்களில் நல்லவர்களுக்கு கெட்டகாரியங்கள் நேரிடுகின்றன. அன்பானவரின் மரணம் மற்றும் கடன் தொல்லையால் அந்த குடும்பம் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தது. ஒரு குடும்பத்தை சின்னாப்பின்ன மாக்குகிறவைகள் இவைகள் இரண்டு மட்டும் அல்ல. "உடல் நலக்குறைவு," "கைவிடப்படுதல்" மற்றும் "திருமணம் முறிவு" போன்றவைகளும் குடும்பங்களை நிலைகுலையச் செய்கின்றன.*

*அந்த விதவை தன் பிரச்சனைகளுக்காக தேவனை குற்றப்படுத்தவில்லை என்பதை கவனியுங்கள். மாறாக, அவள் உதவிக்காக தேவனிடம் திரும்பினாள். சிலர் வாழ்வில் பிரச்சனைகளால் சூழப்படும் போது, அவர்கள் தங்களுக்கு உதவி கிட்டும் ஆதார மூலங்களான தேவன், வேதாகமம் மற்றும் சபை ஆகியவற்றிலிருந்து தங்களை அந்நியப்படுத்திக் கொள்கிறார்கள். உங்கள் வாழ்வில் என்ன போராட்டங்கள் வந்தாலும், கர்த்தர் உங்களை நேசிக்கிறார் மற்றும் அவர் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார் என்பதை ஒருபோதும் சந்தேகப்படாதீர்கள் (ரோமர் 5:8; எபிரேயர் 13:6; 1 பேதுரு 5:7).*

**உதவி**

*ஒரு குடும்பத்தின் சூழ்நிலை நம்பிக்கையற்றதாக இருக்கும் போது, நாம்*

*என்ன செய்யவேண்டும்? முதலாவது, அந்த விதவை செய்தது போல நமக்கும் பிரச்சனை இருக்கிறது என்பதை உணரும் அளவுக்கு நம்மை தாழ்த்த வேண்டும். சிலருக்கு குடும்ப பிரச்சனைகள் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வது தர்மசங்கடமாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் பிரச்சனை இல்லை என்பது போல் காட்டிக்கொள்கிறார்கள். தங்கள் குறைவுகளை தேவைகளை அறிந்தி ருக்கிறவர்கள் மட்டுமே உதவி பெற முடியும் (வெளிப்படுத்தின விசேஷம் 3:20; காண்க சங்கீதம் 81:10ஆ).*[13]

*அதன்பிறகு, "நமக்கு இந்த பிரச்சனையை தீர்க்க* நம்மால் *முடிந்த எல்லாவற்றையும் செய்துவிட்டோமா?" என கேட்க வேண்டும். எலிசா அவளை நோக்கி, "வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல்?" என்றான் (2 இராஜாக்கள் 4:2). அவள் தன் ஆதாரவளங்களை பரிசோதிக்க வேண்டியிருந்தது. அவளிடத்தில் அதிகமாய் இருக்கவில்லை, ஆனால் கொஞ்சம் இருந்தது. அவள் தன்னிடத்தில் இருந்ததை உபயோகிக்க வேண்டியவளாக இருந்தாள் (காண்க யாத்திராகமம் 4:2; மாற்கு 6:38); அவள் தன் பாரத்தை சுமப்பதற்கு தன்னால் என்ன செய்யமுடியுமோ அதை செய்ய வேண்டியவளாக இருந்தாள் (காண்க மாற்கு 14:8அ; கலாத்தியர் 6:5). "சில நேரங்களில் உதவும் கரத்தை கண்டுபிடிப்பதற்கான சிறந்த இடம் உங்கள் கரம் முடியும் இடத்தி லுள்ளது" என சொல்லப்பட்டதுண்டு. நமது கூற்றின்படி "தன் கையே தனக்குதவி" என கூறலாம். ஹேமில்டன் இவ்விதமாக எழுதினார்,*

> *ஒருவர் தனக்கிருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, தன்னால் இயன்ற அளவு முன் செல்வாரெனில், பிறகு மற்றதை தேவன் பார்த்துக்கொள்கிறார். அந்த அளவு நாம் செல்வதற்கு முன்பு ... தான் பொறுப்பேற்றுக் கொள்வதாக தேவன் ஒருபோதும் வாக்குத்தத்தம் செய்யவில்லை. ஒருவர் தன் பாதை எந்த அளவுக்கு தெளிவாய் தெரிகிறதோ அதையும் தாண்டி முன் செல்ல விசுவாசத்தால் திட்டமிடவேண்டும். பின்னர் தன் ஆதாரவளங்கள் யாவும் செலவழிந்துபோகும் வரை முன் செல்ல வேண்டும். அந்த நிலையில், தேவன் பொறுப்பேற்றுக்கொள்வார். அதுவரைக்கும் அல்ல!*[14]

*தனிப்பட்ட முறையில் உங்களால் முடிந்த அளவு எல்லாவற்றையும் செய்தபின்பு, அந்த பெண் எலிசாவினிடத்தில் வந்ததுபோல, நீங்கள் ஞானமுள்ள கிறிஸ்தவ நண்பர்களிடத்தில் உதவி, ஆலோசனை கேட்டு செல்லலாம் (காண்க கலாத்தியர் 6:2; நீதிமொழிகள் 1:5; 11:14; 12:15; 19:20; 27:9). பிரச்சனையில் அகப்படாதவர்கள் அதை தெளிவாய் புரிந்து கொண்டு, தீர்வுக்கான ஆலோசனைகளை கூறமுடியும்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் கர்த்தரிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. "கொஞ்சமாய் கடன்பெற வேண்டாம்" என்ற தலைப்பில் பல பாடங்கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன (2 இராஜாக்கள் 4:3;* KJV*) அந்த பெண் எத்தனை குடங்களை கேட்டுவாங்கியிருந்தாளோ, அவைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அவள் பெறப்போகிற ஆசீர்வாதங்களின் எண்ணிக்கையையும் அவளே தீர்மானித்தாள் என்ற கருத்து தெளிவுப்படுத்தப்பட்டது உண்டு. (இன்னும் நிறைய குடங்களை கேட்டு பெற்றிருந்தால் நலமாயிருந்திருக்கும் என அந்தபெண் சிந்தித்தாளா?) நம்முடைய*

தேவன் தாராளமாய் கொடுக்கிற ஒரு தேவன் என வேதம் போதிக்கிறது (மத்தேயு 6:33; 7:7, 8; எபேசியர் 3:20). அவர் எந்த அளவு தாராளமாய் நம்மை ஆசீர்வதிப்பார் என்பது நாம் எந்த அளவு நிபந்தனை எதுவும் இன்றி அவரை விசுவாசிக்க விருப்பம் உடையவர்களாய் இருக்கிறோம் என்பதால் மட்டும் மட்டுப்படுத்தப்படுகிறது. நீங்கள் உங்கள் பிரச்சனைகளை அவரிடம் விட்டுவிட எப்போது கற்றுக் கொள்கிறீர்களோ, *அப்போது* "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை" உங்களால் அறிந்து கொள்ள முடியும் (பிலிப்பியர் 4:7).

**சந்தோஷம்**

நம்பிக்கையற்றதாக தோன்றுகிற ஒரு குடும்ப பிரச்சனை உங்களுக்கு இருக்கிறதா? உங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்யுங்கள் மற்றும் கர்த்தரை விசுவாசியுங்கள், அவர் உங்களுக்கு உதவி செய்வார். அவர் எவ்விதம் உங்களுக்கு உதவி செய்வார் என்பதை என்னால் கூற இயலாது. ஒரு வேளை அவர் அந்த பிரச்சனையை உங்களை விட்டு அகற்றிவிடுவார்; அல்லது ஒருவேளை அந்த பிரச்சனையை தாங்கிக்கொள்ள உங்களுக்கு உதவிசெய்வார். இதை மட்டும் நிச்சயமாக கூறலாம்: நீங்கள் அனுமதித்தால், அவரால் நிச்சயம் உதவி செய்யமுடியும். அவர் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்வார். முன்னதாக துக்கத்தால் மட்டுமே நிறைந்திருந்த, இப்போது மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிற - நூற்றுக்கணக்கான - குடும்பங்கள் எனக்கு தெரியாவிட்டாலும் அப்படிப்பட்ட டஜன் கணக்கான குடும்பங்கள் எனக்குத் தெரியும்.

யாரேனும் ஒருவர் இவ்விதமாக ஆட்சேபிக்கலாம், "தேவன் விதவைக்கு உதவி செய்வதற்காக ஒரு அற்புதத்தை செய்தார், நாம் இப்போது அற்புதங்களின் காலத்தில் வாழ்வது இல்லை, அவர் எனக்கு எப்படி உதவி செய்ய முடியும்?" அற்புதங்களின் மூலமாக மட்டுமே தேவனால் கிரியை செய்யமுடியும் என சிந்திக்கிற அந்த தனிநபர் எவ்வளவு குறுகிய மனப்பான்மை உடையவராக இருக்கிறார்! தேவன் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தார். தான் விதித்துள்ள இயற்கை விதிகளால், அதை எப்படி இயக்குவது என்பதை அவர் அறிந்தி ருக்கிறார். இதை நாம் "தெய்வாதீனமான" அல்லது "தெய்வீக உதவி" என்று அழைக்கிறோம். ரோமர் 8:28 எனக்கு மிகவும் பிடித்த வசனப் பகுதிகளில் ஒன்று: "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."

மேத்யு ஹென்றி இவ்விதமாக எழுதினார், "இப்போது நாம் அற்புதங்களை எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் நாம் இரக்கங்களை எதிர்பார்க்கலாம்."[15] வாரன் வைர்ஸ்பி, "கர்த்தர் நம்முடைய கடன்களை நாம் அடைக்க … அற்புதங்களை செய்வதில்லை, ஆனால் நாம் அவரை விசுவாசித்து கீழ்ப்படிந்தால் அவர் நம் தேவைகளை சந்திக்கிறார். நாம் எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புக்கொடுத்தால், கொஞ்சமானதை நீண்டகாலம் பயன்படும்படி செய்கிறார்"[16] என கூறுகிறார். குர்மாச்சர், "தேவன் தமது உதவிகளை சாதாரண முறையில் நமக்கு தருவதால், அது அதிசயத்தன்மை குறைந்ததாய் இருக்கிறதா?"[17] என வினவுகிறார். "இல்லை!" என நாம் நிச்சயமாக பதில் அளிக்கிறோம். "கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மன உருக்கமானவர்" (சங்கீதம் 116:5)!

## முடிவுரை

*தேவன் நீண்டகாலத்துக்கு முன்பு ஒரு குடும்பத்திற்கு உதவி செய்தார் - நீங்கள் அனுமதித்தால், அவர் உங்கள் குடும்பத்திற்கு உதவி செய்யக் கூடும். தேவனுடைய உதவியை பெற்றுக்கொள்வதை உறுதி செய்து கொள்வதற்கு, முதலில், உங்கள் உறவு தேவனோடு சரியாக இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இந்த பாடத்தின் நோக்கம் மக்கள் கிறிஸ்தவர்களாக மாற என்ன செய்யவேண்டும் என்பதை போதிப்பது அல்ல. ஆனால் இதி லிருந்து நமக்கு பொருந்தக் கூடிய சில கருத்துக்களை/பாடங்களை தரவழைக்க முடியும்:*

- *அந்த பெண் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு கடன் பட்டிருந்தாள். நாம் ஒருபோதும் நம்மால் தீர்க்கமுடியாத அளவுக்கு, பாவம் என்னும் பெரும் கடனை சுமந்து கொண்டிருக்கிறோம் (காண்க ஏசாயா 64:6; ரோமர் 6:23அ).*
- *அந்த பெண்ணின் மகன்கள் அடிமைத்தனத்திற்கு உள்ளாகும் ஆபத்தால் பயமுறுத்தப்பட்டார்கள். நாம் பாவத்திற்கு அடிமைபட்டவர்களாக இருக்கிறோம் (காண்க தீத்து 3:3; 2 பேதுரு 2:19; ரோமர் 6:6).*
- *அந்த விதவைக்கு உதவியது போல, தேவன் நமக்கும் கிருபையின் உதவிகளை நல்கியுள்ளார் - ஆனால் முதலில் நம்மால் முடிந்ததை நாம் செய்யவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். நாம் அவரை விசுவாசிக்கும்படி, திருமுழுக்கு பெறும்படி மற்றும் அதன்பிறகு அவருக்காக வாழும்படி கோருகிறார் (மாற்கு 16:16; ரோமர் 6:3-6; கலாத்தியர் 3:26, 27).*
- *நாம் தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் நம்மை அர்ப்பணித்தால், இஸ்ரவேலில் அந்த விதவையின் காலி குடங்களை அவர் நிரப்பினது போல, நம்முடைய வெறுமையான வாழ்க்கையையும் நிச்சயமாக அவர் நிரப்புவார். அவர் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னிப்பார் (நடபடிகள் 2:38), நித்திய வாழ்வின் நம்பிக்கையை நல்குவார் (தீத்து 1:2), ஒவ்வொரு நாளிலும் நம்மை பெலப்படுத்தி நடத்துவார் (எபேசியர் 6:10).*

*தமது அன்பினால் (காண்க 1 தீமோத்தேயு 1:14) நம் "பாத்திரங்களை" நிரம்பி வழியப்பண்ணுகிறவரைத் துதியுங்கள் (காண்க சங்கீதம் 23:5)!*

---

குறிப்புகள்

[1]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 202. Josephus indicated that this was the widow of Obadiah (*Antiquities* 9.4.2). [2]Ibid,202. [3]*மற்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் இந்த பெண்ணை காப்பற்ற ஏன் வரவில்லை என்று வினவப்படமுடியும். 2 இராஜாக்கள் 4:38-44 எல்லா பயிற்சியாளர்களும் நிதி ஆதாரங்கள் இன்றி இருந்தார்கள் என்பதை காட்டுகிறது.* [4]Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua - Esther* (New York: Abingdon-Cokesbury Press, n.d.), 490. [5]*அந்த பெண் "கடன்காரர் என் இரண்டு பிள்ளைகளையும் எடுத்து செல்ல வந்துவிட்டார்," என கூறினாள் (வசனம்*

*1ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஆனால் பிள்ளைகள் இன்னும் அவளோடு இருந்தார்கள் (வசனங்கள் 4-6).* அநேகமாக கடந்த முறை அந்க கடன்காரர் வீட்டிலுள்ள பொருட்களை எடுத்துச் செல்ல வந்தபோது, நான் அடுத்தமுறை வரும்போது உன் பையன்களை பிடித்து சென்றுவிடுவேன் என கூறியுள்ளான். [6]Richard Newton, *Bible Models* (London: Hodder and Stoughton, 1887), 193. [7]C. F. Keil and F. Delitzsch, "1and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 309; G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings*, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 64. [8]Clarke, 491. [9]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 48. [10]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadephia: Herman Hooker, 1839), 52.

[11]W. T. Hamilton, "Borrow Not a Few," *The Preacher's Periodical* (April 1983): 14. [12]Adapted from Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review amd Herald Publishing Association, 1960), 34. [13]Hamilton, 13. [14]Ibid., 14. [15]Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961), 404. [16]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 29. [17]Krummacher, 52.